**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 190 of 2019**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : அய்யன்சாமி** | **Father/Husband's Name: நாச்சிமுத்து கவுண்டர்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.08.2024**

**A1 Present. A2, A3 absent. 355 BNSS PFA.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பொன்னாபுரத்தில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொன்னதை தான் எழுதியுள்ளார்கள். அதை நான் படித்து பார்த்தேன். கடந்த 22.10.2018ம் தேதி மதியம் சுமார் 12.15 மணிக்கு நானும், எனது மனைவி பூமதியும் சம்பவ இடமான இடத்திற்கு உழவு ஓட்டுவதற்காக சென்றேன். ஆஜர் எதிரி கோபால் சாமி என்பவர் நீதிமன்றத்தில் உள்ளவர் தான். மற்ற எதிரிகளை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். அப்போது கோபால்சாமி, அவரது மனைவி, அவரது மகன் ஆகியோர் அங்கு வந்து நான் உழவோட்டிக்கொண்டிருந்ததை தடுத்து கோபால் சாமி என்பவர் என்னை மூக்கிலும், வாயிலும் அடித்தார். அதில் எனக்கு மூக்கிலும், இடது தோள்பட்டையிலும் , வாயிலும் இரத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வடிந்தது. எனது மனைவிக்கு கோபால் சாமி கையில் வைத்திருந்த கத்தியால் குத்தி கையை கிழித்துவிட்டார். எனது மனைவியை நெஞ்சிலும், பிறப்புரிப்பிலும் எட்டி உதைத்தார். அதில் எனது மனைவியால் நடக்கவே முடியவில்லை. எதிரிகளுக்கும், எனக்கும் என்ன பிரச்சனை என்றால் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனது அப்பா நாச்சிமுத்து கவுண்டர் என்னிடம் எனக்கு தெரியாமல் கையெழுத்து பெற்று எதிரிகளுக்கு விற்றுவிட்டார். அது சம்பந்தமாக

பிரச்சனை நடந்தது. புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**</u>

2. சம்பவம் நடந்த இடமானது எதிரி கோபால் சாமி எனது அப்பாவிடமிருந்து கிரயம் பெற்ற நிலம் என்றால் சரிதான். மேற்படி சொத்து சம்பந்தமாக நான் பழனி சார்பு நீதிமன்றத்தில் எனது அப்பா மீதும், எதிரி கோபால் சாமி மீதும் வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது கடந்த 2022ம் ஆண்டு எதிரி கோபால் சாமிக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். சம்பவத்தன்று எனது அப்பாவிடமிருந்து எதிரி கோபால்சாமி கிரயம் பெற்றநிலத்தில் தான் நான் எனது மனைவி பூமதி மற்றும் எனது மாமனார் கருப்புசாமி ஆகியோர் உழவோட்டிக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். நான் எனது மனைவி மற்றும் எனது மாமனார் ஆகியோர் எதிரி கோபால் சாமிக்கு பாத்தியப்பட்டநிலத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற நோக்கில் அங்கு உழவு ஓட்டுவதற்காக சென்றுள்ளோம் என்றால் சரியல்ல. பழனி நகர் காவல் நிலையத்தில் மேற்படி சொத்து சம்பந்தமான வழக்கு தீர்ப்பாகும் வரை எங்களை மேற்படி பூமியில் உழவோட்டுங்கள் என்று சொன்னதன் அடிப்படையில் நான் அங்கு உழவோட்டுவதற்கு சென்றேன். மேலும் மேற்படி தீர்ப்பு எதிரிக்கு சாதகமாக வந்துவிட்டால் அவர் அந்த பூமியில் உழவு பணி மேற்கொள்ளட்டும் என்று போலிசார் சொன்னார்கள். நான் உழவோட்டும் போது மாட்டை ஓட்டும் தார் குச்சி நுனியில் சார்ப்பான ஆணி போன்ற அமைப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் உழவோட்டும் போது முத்துலட்சுமி தான் என் நிலத்தில் ஏன் உழவோட்டுகிறாய் என்று கேட்டார் என்றால் முத்துலட்சுமி மற்றும் அவரது கணவர் கோபால் சாமி ஆகிய இருவரும் தான் என்னிடம் வந்து கேட்டார்கள்.அவ்வாறு மேற்படி இருவரும் என்னிடம் கேட்டதற்கு நான் , எனது மனைவி மற்றும் எனது மாமனார் ஆகிய மூவரும் சேர்ந்து முத்துலட்சுமி மற்றும் கோபால் சாமியை மாட்டை ஓட்டும் தார்குச்சியால் அடித்தோம் என்றால் சரியல்ல. முதலில் அவர்கள் தான் அடித்தார்கள். நான் , எனது மனைவி மற்றும் எனது மாமனார் ஆகியோர்கள் மீது இது சம்பந்தமாக நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு கு.எண். 581/2018ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருக்கிறது என்று

சொன்னால் சரிதான். சம்பவத்தின் போது நான் எதிரிகளை தாக்கும் போது எனது தார்குச்சியின் நுனி பகுதி என் மனைவியின் கையில் பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்குச்சம்பவமானது மதியம் 2–3 மணி வரை நடந்தது. சம்பவம் நடந்த பிறகு நான் பழனி அரசு மருத்தவமனைக்கு வந்து சிகிச்சைக்கு சேர்ந்தேன். புகார் வாக்குமூலத்தை நான் காவல் நிலையத்தில் கொடுத்தேனா அல்லது மருத்துவமனையில் வைத்து கொடுத்தேனா என்றால் நான் மருத்துவமனையில் வைத்து தான் கொடுத்தேன். வாய் மொழியாக கொடுத்தேனா அல்லது எழுத்து மூலமாக கொடுத்தேனா என்றால் நான் வாய் மொழியாக கொடுத்த புகாரை போலிசார் எழுதி கொண்டார்கள். அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட அச்சு முதல் தகவல்அறிக்கையில் நான் கையொப்பம் போட்டேனா என்றால் கையொப்பம் போட்டேன். வழக்கு சம்பந்தமாக எனது மனைவி புகார் கொடுக்கவில்லை அவர் சாட்சிய கையொப்பம் மட்டும் இட்டார். என்னிடம் புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்ற அதிகாரி என்ன பதவியில் இருந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் புகார் வாக்குமூலம் கொடுத்ததை தவிர மற்ற எந்த நாளிலும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் எங்களை அடிக்கவில்லை என்றும் அவர்களது சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் புகார் வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் ஆம் அப்படித்தான் சொன்னேன். இவ்வழக்கின் வழக்கு சொத்துக்களை எதுவும் போலிசார் கைப்பற்றவில்லை. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.08.12 13:45:32 +0530

நீதித்துறை நடுவர்

பழனி

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 190 of 2019**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : பூமதி** | **Father/Husband's Name: அய்யன்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.08.2024**

**A1 Present. A2, A3 absent. 355 BNSS PFA.**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது பொன்னாபுரத்தில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 22.10.2018ம் தேதி மதியம் சுமார் 12–12.30 மணியளவில் நானும், எனது கணவர் , எனது அப்பாவும் நாங்கள் அனுபோகத்தில் வைத்திருந்த உழவு காட்டிற்கு சென்றோம். அப்போது ஏர் ஓட்டுவதற்காக மாட்டு வண்டிகளை வாடகைக்கு எடுத்து வந்திருந்தோம். அப்போது அவர்கள் உழவோட்டிக்கொண்டிருந்த போது முத்துலட்சமி மற்றும் அவரது கணவர் கோபால்சாமி ஆகியோர் வந்தார்கள். வந்ததும் கோபால்சாமி உழவோட்ட வந்திருந்தவர் வைத்திருந்த குச்சியை பிடுங்கி என்ன ஏது என்று கேட்காமல் எனது கணவர் அய்யன்சாமி அவர்களை அடித்தார். நான் அதை தடுப்பதற்காக போன போது கையில் என்ன வைத்திருந்தார் என்று தெரியவில்லை என்னுடைய இடது கையில் கிழித்துவிட்டார். மேலும் அவர் அந்த தடியால் என்னுடைய தொடையில் அடி அடி என அடித்துவிட்டார். அதில் என்னால் நடக்கவே முடியவில்லை. என்னுடைய கணவரை மூக்கு மற்றும் வாயில் கோபால்சாமி அடித்ததில் எனது கணவருக்கு இரத்தமாக வந்து கொண்டிருந்தது. அடித்து கொண்டிருந்த போது தான் கோபால் சாமியின் மகன் அருண் அங்கு வந்தார். நான் அந்த சமயத்தில் வைத்திருந்த செல்போனை நான் வீடியோ எடுத்துவிடுவேனோ என**

நினைத்து கோபால் சாமி என்னிடமிருந்து பிடுங்கி கொண்டார். அதை தரவில்லை. சம்பவத்தின் போது எதிரிகள் கோத்தா, அவளே, இவளே , அத மூடுடி என்று பேசினார்கள்.

2. என்னுடைய கணவருடைய சட்டை வேட்டி எல்லாம் இரத்ததால் நனைந்து விட்டது. எனது கணவர் மூச்சு பேச்சு இல்லாமல் கிடந்தார். நான் அவரை எழுப்புவதற்காக போன போதும் என்னை அடித்தார். எனது அப்பா தடுக்க வந்த போது அவரை கோபால் சாமி மற்றும் முத்துலட்சுமி ஆகிய இருவரும் சேர்ந்து அடித்தார்கள். அப்போது யாரோ போன் செய்து தகவல் சொன்னதன் அடிப்படையில் 108 ஆம்புலன்ஸ் தோட்டத்திற்கே வந்து விட்டது. சம்பவத்தின் போது எங்களது தோட்டத்திற்கு பக்கத்தில் வேலை செய்யும், அனுப்பிரியா, ரேவதி, அம்சா, மயில்சாமி, வெள்ளைத்தாய், துரைராஜ் ஆகியோர் அங்கு வந்து விட்டார்கள். ஆம்புலன்சில் எனது கணவரையும், என்னையும் பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சையில் சேர்த்தார்கள். எனது கணவர் மற்றும் எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. நாங்கள் சிகிச்சைக்கு சேர்ந்த மறுநாள் தான் எனது கணவருக்கு நினைவு வந்தது அன்று மதியம் போல் போலிசார் வந்து எனது கணவரை விசாரித்த போது அவர் நடந்தவற்றை சொன்னார். அந்த சமயத்தில் நான் அங்கிருந்து சாட்சி கையொப்பம் இட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

3. நான் வழக்கு சம்பவத்தின் போது உழவு ஓட்டிய காட்டை எதிரி கோபால் சாமி கிரயம் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். ஆனால் அவர் தவறான எண் போட்டு வாங்கியிருந்தார். சம்பவத்தின் போது நான் , எனது அப்பா மற்றும் எனது கணவர் சம்பவ இடத்திற்கு சென்று கூலியாட்கள் மூலம் உழவு ஓட்டினோம். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதி அனைத்தும் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மாடு ஓட்டும் மாட்டு குச்சியில் நுனியில் கூர்மையான ஆணி போன்ற அமைப்பு உள்ளது என்று சொன்னால் ஓட்டுபவருக்கு தான் தெரியும். நாங்கள் நிலத்தில் உழவு ஓட்டும் போது கோபால் சாமி மற்றும் அவரது மனைவி இருவரும் ஏன் என் நிலத்தை உழவு ஓட்டுகிறாய் என்று கேட்டதற்கு நான் ,

எனது கணவர் மற்றும் எனது அப்பா மூவரும் சேர்ந்து கோபால் சாமி மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரையும் மாடு ஓட்டும் சாட்டை குச்சியால் மாறி மாறி அடித்து மேற்படி இருவருக்கும் ரத்த காயத்தை ஏற்படுத்திவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல.

4. எதிரி கோபால் சாமி பழனி நகர் காவல்நிலையத்தில் என் மீதும், எனது கணவர் மீதும் மற்றும் எனது அப்பா மீதும் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் கு.எண்.581/2018ஆக வழக்கு பதிவு செய்யபட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 23.10.2018ம் தேதி 3 மணிக்கு எனது கணவரை போலிசார் விசாரித்தார்கள். அன்றைய நாள் தவிர்த்து வேற எந்த தேதியிலும் போலிசார் எங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள பட்டியல் சாட்சி 5 மற்றும் பட்டியல் சாட்சி 6 ஆகிய இருவரும் எங்களுக்கு உடன் பங்காளி என்று சொன்னால் சரிதான். கோபால் சாமி நிலத்தை சட்டத்திற்கு புறம்பா அபகரிக்க வேண்டும் என்ற கெட்டஎண்ணத்தில் நான் எனது கணவர் , எனது அப்பா, எனது உடன் பங்காளி மயில்சாமி மற்றும் துரைராஜ் ஆகியோர் ஒன்று சேர்ந்து ஆலோசித்து நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி எதிரிகள் மீது பொய்புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் தார்குச்சியால் எதிரிகளை தாக்கும் போது நான் குறுக்கே செல்லும் போது எனது கையை தாக்கிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் எதிரிகள் எங்களை தாக்கவில்லை என்றும் ,அசிங்கமாக பேசவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பின்னிட்டு வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உழவோட்ட வந்ததாக சொல்லபடும் நபர் போலிசார் விசாரித்து சாட்சியாக சேர்க்கப்பட்டாரா என்ற விசயம் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் நான், எனது கணவர், எனது அப்பா மூவரும் சேர்ந்து தான் உழவோட்டினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.08.12 13:45:44 +0530

நீதித்துறை நடுவர்

பழனி

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 190 of 2019**

**Deposition of Witness P. W.3**

| | |
|---|---|
| **Name : மயில்சாமி** | **Father/Husband's Name: சின்னமுத்துசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.08.2024**

**A1 Present. A2, A3 absent. 355 BNSS PFA.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ஆயக்குடி ஹவுசிங் போடில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டபடும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 22.10.2018ம் வருடம் சுமார் 11–12 மணியளவில் எங்களது தோட்டத்தில் வைத்து சம்பவம் நடந்த இடத்தில் ஆய்வாளர் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அப்போது நானும், எனது அண்ணன் துரைராஜ் என்பவரும் இருந்தோம். அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் இட்டோம். கோபால் சாமியும், அவரது மனைவியும் நிலத்தகராறு தொடர்பாக அய்யன் சாமியையும், அவரது மனைவியையும் அடித்தார்கள். அப்போது அய்யன் சாமியையும், அவரது மனைவியையும் சம்பவத்தன்று சம்பவ இடத்தில் மயங்கி கிடந்தார்கள். அப்போது நான் 108க்கு தகவல் சொல்லி அவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அது தொடர்பாக போலிசார் விசாரணை செய்து பார்வை மகஜர் , வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

3. நான் அ.சா.1 க்கு சொந்த பங்காளி என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லபடும் நிலம் கோபால் சாமிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால்

**சரிதான். நான் என் தோட்டத்தில் இருக்கும் போது போலிசார் என்னிடம் வந்து கையொப்பம் கேட்டார். கையொப்பம் போட்டேன். எனது அண்ணன் துரைராசும் கையொப்பம் போட்டார்.நான் எழுதிய தாளில் தான் கையொப்பம் போட்டேன். அய்யன் சாமி மனைவி பூமதி , நான் மற்றும் எனது அண்ணன் ஆலோசித்து கோபால் சாமிக்கு பாத்தியப்பட்ட நிலத்தை அபகரிக்க அத்து மீறி நுழைந்து கோபால் சாமி மற்றும் அவரது மனைவி முத்துலட்சுமியை சாட்டை குச்சியால் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல.**

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.08.12 13:45:52 +0530

**நீதித்துறை நடுவர்**

**பழனி**